**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.8**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பட்டத்தையன் | தொழில் | : கிராம நிர்வாக அலுவலர் |
| தகப்பனார் பெயர் | : நாகப்பன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பெரியகோட்டை | வயது | : சுமார் 49 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நான் கடந்த 2023ம் ஆண்டு பெரியகோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 18.11.2023ம் தேதி சத்திரப்பட்டி காவல் ஆய்வாளர் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டார். வழக்கு எண்.159/2023 ன் படி வழக்கு விபரத்தை கூறி என்னை நேரில் வரச் சொன்னார். நானும், எனது கிராம உதவியாளர் ஆராயி என்பவரும் சத்திரப்பட்டி பெரியகோட்டை, ரெட்டிபட்டி அருகே சென்றோம். அப்போது காலை 07.00 மணிக்கு சத்திரப்பட்டி ஆய்வாளரும், வழக்கு சம்மந்தப்பட்ட பூசாரிபட்டி தொட்டப்பநாயக்கர் மகன் சிவராஜ் என்பவரும் அங்கு இருந்தார். அப்போது வழக்கு விபரத்தை பற்றி நான் கேட்டு தெரிந்து கொண்டேன். அதன்பிறகு இவ்வழக்கு சம்மந்தமான சான்று பொருளை கைப்பற்றுவதற்காக பெரியகோட்டை பிரிவு அருகே சுப்புராஜ் என்பவரின் மக்காச்சோளகாட்டிற்கு அருகே சென்று அங்கு கிடந்த அடிப்பட்ட நபரான பிரகாஷ் என்பவரின் LAVA செல்போன் மற்றும் சிவராஜ் என்பவருக்கு சொந்தமான TN 57 AZ 9316 என்ற எண் கொண்ட பேசன்புரோ வாகனத்தையும், அடிபட்ட பிரகாஷ் என்பவருக்கு சொந்தமான TN 57 P 3484 என்ற மேக்ஸ் 100என்ற வாகனத்தையும்,

மரக்கட்டையையும், எனது முன்னால் கைப்பற்றினார்கள். அதன்பின்பு வழக்கு சம்மந்தமாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எனது முன்னால் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2**. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.3**. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.4**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

TN 57 AZ 9316 என்ற இருசக்கர வாகனம் எதிரிக்கு பாத்தியப்பட்ட வாகனம் அல்ல என்றால் ? சரியல்ல, எதிரிக்கு பாத்தியப்பட்ட வாகனம் ஆகும். போலீசார் என்னை விசாரித்தபோது மேற்படி வாகனம் காயம்பட்ட பிரகாஷ் என்பவருக்கு சொந்தமான வாகனம் என்று சொன்னேனா என்றால் ? இல்லை. போலீசார் அழைத்தன் பேரில் அலுவல் பணியாக கருதி சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் ? சரிதான். எங்களது அலுவலகத்தில் Movement Register என்ற ஒரு பதிவேடு உள்ளது என்றால் ? சரிதான். நாங்கள் அலுவலல் பணி சம்மந்தமாக வெளியே செல்லும் போது Movement Register ல் எழுதி வைத்து விட்டு வெளியே செல்ல வேண்டும் என்றால் ? சரியல்ல. நாங்கள் எங்களது கிராமத்திற்குள் அலுவலல் நிமித்தமாக செல்லும்போது அவ்வாறு எழுதவேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் வட்டாட்சியருக்கு நாங்கள் எங்கு எங்கு சென்றோம் என்பதை அறிக்கையாக அன்றைக்கு நடப்பதை அன்றைய தினமே கொடுத்துவிடுவோம். இந்த வழக்கில் நான் ஆய்வாளர் அழைத்தன் பேரில் சென்றுள்ள நிலையில் அந்த அறிக்கையை வட்டாட்சியருக்கு அனுப்பியுள்ளேனா என்றால் ? ஆமாம், அனுப்பியுள்ளேன். கைப்பற்றப்பட்ட பொருட்களும், அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்த இடமும் எங்களது

கிராம நிர்வாக அலுவலரின் ஆள்வரையறை எல்லைக்குட்பட்டது என்றால் ? சரிதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியான கைப்பற்றுதல் மகஜரில் நேரம் / மணி திருத்தப்பட்டுள்ளதா என்றால் ? ஆமாம், திருத்தப்பட்டுள்ளது. எழுத்தின் மேல் எழுத்தாக எழுதப்பட்டுள்ளது. எங்களது அலுவலகத்தில் கிராம நிர்வாக அலுவலருக்கான முத்திரை உள்ளது என்றால் ? சரிதான். நான் கையொப்பம் செய்துள்ள அத்தாட்சியில் எங்களது அலுவலக முத்திரை இல்லை என்றால் ? சரிதான். அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்பதால் எங்களது அலுவலக முத்திரை எதுவும் பதியப்படவில்லை என்றால் ? சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. துரைச்சாமி என்பவரின் மக்காச்சோளத்தோட்டம் எங்குள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் ? தெரியாது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் தேவத்தூர் ரோடு, பெரியகோட்டை பிரிவு, துரைச்சாமி தோட்டத்திற்கு அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். நான் சொல்லியுள்ளதை போல் சுப்புராஜ் என்பவரின் மக்காச்சோள காட்டிற்கு அருகில் நான் சொல்லியுள்ள சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் ? சரியல்ல. சுப்புராஜ் தோட்டத்திற்கு அருகில் தான் கைப்பற்றப்பட்டது. பார்வை மகஜரை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் ? படித்து பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நான் கையொப்பம் செய்துள்ள பார்வை மகஜரில் சான்று பொருட்கள் துரைச்சாமி தோட்டத்திற்கு அருகில் வைத்து கைப்பற்றப்பட்டது என்று கண்டுள்ளதா என்றால் ? இல்லை. மாதிரி வரைபடம் வரையும் போது நான் உடன் இருந்தேனா என்றால் ? ஆமாம். உடன் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் துரைச்சாமியின் தோட்டம் எங்கேயாவது காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பார்வை மகஜரிலும் எனது கையொப்பத்திற்கு கீழ் அலுவலக முத்திரை எதுவும் இல்லை என்றால் ? சரிதான். பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவைகள் யார் தயார் செய்தார்கள் என்றால் ? ஆய்வாளர் முன்பு தலைமைக்காவலர் தயார்

செய்தார். மேற்படி ஆவணங்களில் தலைமைக் காவலர் கையொப்பம் செய்தாரா என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவைகள் வெவ்வேறு ஆட்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. ஒரே நபரால் தான் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. நான் ரெட்டியபட்டி பிரிவிற்கு செல்வதற்கு முன்பு அங்கு காவல்துறையினர் இருந்தார்களா என்றால் ? ஆய்வாளர் மற்றும் வழக்கு சம்மந்தப்பட்ட நபர்கள் இருந்தார்கள். எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சிவராஜ் என்பவரை ஆய்வாளர் எங்கு இருந்து எப்போது அழைத்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்லியுள்ள நேரத்தில், சொல்லியுள்ள முறையில், சொல்லியுள்ள இடத்தில், சொல்லியுள்ள தேதியில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம், அத்தாட்சி ஆகியவைகள் தயார் செய்யப்படவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து என்னிடமும், கிராம உதவியாளர் வசமும் கையொப்பம் பெறப்பட்டது என்றால் ? சரியல்ல. நான் சொல்லியுள்ளவாறு இருசக்கர வாகனம் மற்றும் சான்று பொருட்களை காவல் ஆய்வாளர் எனது முன்பு கைப்பற்றவில்லை என்றால் ? சரியல்ல. வழக்கிற்காக சான்று பொருட்கள் பிறகு தயார் செய்யப்பட்டவை என்றால் ? சரியல்ல. பெரியகோட்டை என்பது சத்திரப்பட்டி காவல் நிலையத்திற்குட்பட்டது என்றால் ? பெரியகோட்டை என்பது அம்பிளிக்கை காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியாகும். சம்பவம் நடந்த இடமானது சத்திரப்பட்டி காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதி ஆகும். சம்பவம் நடந்த இடம் எந்த கிராமத்தை சார்ந்தது என்றால் ? ரெட்டியபட்டி கிராமத்தை சார்ந்தது. ரெட்டியபட்டிக்கும், சான்று பொருட்களை கைப்பற்றப்பட்ட இடத்திற்கும் சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். ரெட்டியபட்டிக்கும் கிழக்கு தான் பெரியகோட்டை என்றால் ? வடக்கில் ஒரு கி.மீ தூரத்தில் உள்ளது. நான் ஏற்கனவே சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் காவல்துறையின் வேண்டுகோளுக்கினங்க கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ? இல்லை. நான்

காவல் ஆய்வாளருக்கு வேண்டியவர் என்பதால் ரெட்டியபட்டி கிராம நிர்வாக அலுவலரை அழைக்காமல் என்னை அழைத்து கையொப்பம் பெற்றுள்ளார் என்றால் ? ரெட்டியபட்டி, பெரியகோட்டை ஆகிய இரண்டும் ஒரே தொகுப்பு கிராமம் ஆகும். ரெட்டியபட்டி கிராமத்திற்கு தனியாக கிராம நிர்வாக அதிகாரி உள்ளார் என்றால் ? இல்லை. வழக்கிற்காக ரெட்டியபட்டி கிராம நிர்வாக அதிகாரி இல்லை என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.02 19:48:57 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.9**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆராயி | தொழில் | : கிராம உதவியாளர், |
| தகப்பனார் பெயர் | : அம்மாவாசை | கணவர் பெயர் | : செல்லத்துரை |
| கிராமம் | : பெரியகோட்டை | வயது | : சுமார் 48 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

18.11.2023ம் தேதி 07.00 மணிக்கு சத்திரப்பட்டி போலீஸ் ஸ்டேசனில் இருந்து போன் வந்தது. நானும், கிராம நிர்வாக அதிகாரியும் ரெட்டியபட்டி பிரிவிற்கு சென்றோம். தொட்டியநாயக்கர் மகன் சிவராஜ் என்பவர் அங்கு அடிபட்டு கிடந்தார். அங்கு சென்று பார்க்கும் போது இரண்டு வண்டிகள், செல்போன், மரக்கட்டைகள் கிடந்தது. அங்கு போலீசார் வந்தார்கள். சிவராஜ் என்பவரை அடித்து போட்டு இருந்தார்கள். அதை போலீசார் வரைந்து வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு பிறகு நான் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றுவிட்டேன். ஸ்டேட்மெண்ட் எழுதி கையெழுத்து போடச் சொன்னார்கள் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.5**. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.6**. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.7**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

( கடந்த 18.11.2023ம் தேதி புலன் விசாரணை அதிகாரியிடம் அளித்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியானவர், சாட்சியம்

முன்னிலைப்படுத்தியிருப்பதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.)

அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் எங்கு வேலை பார்த்து வருகிறேன் என்றால் ? பெரியகோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை அவர் உட்கார்ந்து இருக்கும் இடத்தில் இருந்து ஆஜர் எதிரி தெரியுமா என்றால் ? எனக்கு அவரை தெரியவில்லை. நான் கடந்த 18.11.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு சத்திரப்பட்டி காவல் ஆய்வாளர் அழைத்தன் பேரில் பெரியகோட்டை பிரிவு அருகே சென்ற போது காலை 07.15 மணிக்கு ஆஜர் எதிரி சிவராஜ் என்பவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் தன்மைபடி சம்பவ இடமான பெரியகோட்டை பிரிவு சுப்புராஜ் என்பவரின் மக்காசோள காட்டிற்கு சென்று ஆஜர் எதிரி அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை பார்வையிட்டு காவல் ஆய்வாளர் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சம்பவ இடத்தில் சான்று பொருட்களை கைப்பற்றியதாகவும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர், பார்வை மகஜர் ஆகிய ஆவணங்களில் நான் காவல் ஆய்வாளர் முன்பு கையொப்பம் செய்துவிட்டு ஏதோ ஒரு காரணத்திற்காக வேண்டி தற்போது இந்த வழக்கில் நடந்த சம்பவங்களை சொல்லாமல் உள்ளேன் என்றால் ? சரியல்ல. வேண்டுமென்றே இவ்வழக்கில் சாட்சியம் அளிக்காமல் செயல்பட்டுள்ளேன் என்றால் ? சரியல்ல.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.02 16:49:03 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.10**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மருத்துவர் சிவசெல்வி | தொழில் | : மருத்துவர் |
| தகப்பனார் பெயர் | : திருமலைச்சாமி | கணவர் பெயர் | : செல்வராஜ் |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 42 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நான் தற்போது ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 17.11.2023ம் தேதி காலை 09.35 மணிக்கு பணியில் இருந்த போது 37 வயது மதிக்கத்தக்க பிரகாஷ் என்பவரை அவரது மனைவி சசிரேகா என்பவர் என்னிடம் அடிபட்டுவிட்டதாக கூறி மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். நான் அவர் மனைவியை விசாரித்த போது அவருக்கு அந்த காயம் எவ்வாறு ஏற்பட்டது, எந்த நாளில் எந்த நேரத்தில் ஏற்பட்டது என்பது தெரியவில்லை என்றும், அவர் ரெட்டிபட்டி பெரியகோட்டையில் இருந்து அழைத்து வந்தாக கூறினார்கள். அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடன் இருந்தார். நான் கூறிய செயல்களை அவர் செய்தார். வெளிக்காயங்கள் இருந்தது. அதில்,

1. முகத்தில் கீழ் தாடை பலத்த காயத்துடன் காணப்பட்டது.

2. இடது கண்ணை சுற்றிலும் வீக்கம் காணப்பட்டது.

அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தோம். திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட சான்றிதழில்

1. C.T Scan பார்த்துள்ளார்கள். நெஞ்சு பகுதியில் இரண்டு பக்க நுரையீரல் ஜவ்வில் தண்ணீர் கோர்க்கப்பட்டு இருந்தது.

2. C.T. Scan முக எலும்பில் மற்றும் பல எலும்பு முறிவுகள் காணப்பட்டது.

3. இடது பக்க தாடை எலும்பு பலவாறாக உடைந்து விலகி காணப்பட்டது.

4. இடது பக்க கண் எலும்பு உடைந்து காணப்பட்டது.

மேற்கூறிய காயங்களின் அடிப்படையில் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சான்றிதழின் அடிப்படையில் காயமானது கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **என்னிடம் காட்டப்படும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ.8 காயச்சான்றிதழில் இரண்டு காயங்கள் மட்டும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? இரண்டு வெளிக்காயங்கள் ஏற்பட்டு இருந்தது. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டதற்கு பிறகு வழங்கப்பட்ட ஆவணங்களின் தன்மைபடி கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளேன் என்றால் ? சரிதான். இரண்டு வெளிக்காயங்களில் ஒன்று தாடையிலும் மற்றொன்று இடது கண்ணிற்கு கீழும் உள்ளது என்றால் ? இடது கண்ணை சுற்றிலும் காயம் ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான Case sheet நான் பார்க்கவில்லை என்றால் ? ஆமாம். காயம்பட்டவருக்கான C.T. Scan யை நான் பார்க்கவில்லை என்றால் ? ஆமாம். இந்த வழக்கு சம்மந்தமாக காயம்பட்ட நபருக்கு X Ray எடுக்கப்பட்ட விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் ? கருத்துரையின் படி X Ray எடுக்கவில்லை. எனக்கு வழங்கப்பட்ட ஆவணங்களில் X Ray எடுக்கப்பட்டதற்கான சான்றிதழ் இல்லை. அதனால்

என்னால் சொல்ல முடியாது. C.T. Scan நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? இல்லை. பிரகாஷ் என்பவருக்கு ஏற்பட்ட காயமானது எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி காயச்சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் ? Not Known என்று காயச்சான்றில் குறிப்பிட்டுள்ளேன். சசிரேகா என்பவர் அழைத்து வந்தார். எதனால் ஏற்பட்டது என்று அவர் சொல்லாத காரணத்தினால் நான் என்னால் எழுத முடியவில்லை. நோயாளி சுயநினைவுடன் இருந்தார் என்றால் ? சரிதான். நோயாளி பேச முடியாத நிலையில் இருந்தார் என்று விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ? இல்லை. மோட்டார் வாகன விபத்தில் ஒரு நபர் கீழே விழும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் ? ஆமாம், உள்ளது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.02 19:49:10 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.11**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமலைசாமி | தொழில் | : காவல் உதவி ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : திருமலைச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : சத்திரப்பட்டி | வயது | : சுமார் 60 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நான் தற்சமயம் அம்பிளிக்கை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.11.2023ம் தேதி சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்து பிரகாஷ் என்பவரை பார்த்த போது பேச முடியாத நிலையில் சிகிச்சையில் இருந்த காரணத்தினால், சிகிச்சையில் உடன் இருந்த அவரது தகப்பனார் ராமச்சந்திரன் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காவல் நிலையம் 17.11.2023ம் தேதி 20.00 மணிக்கு வந்து நிலைய குற்ற எண்.159/2023 இ.த.ச பிரிவுகள் 324, 327 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **பிரகாஷ் என்பவரின் தகப்பனார் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.9.** 17.11.2023ம் தேதி நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை எண்.159/2023 **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10**. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

சத்திரப்பட்டி காவல் நிலையத்திற்கும், ஒட்டன்சத்திரம் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ? 15 கி.மீ ஆகும். சத்திரப்பட்டியில் இருந்து ஒட்டன்சத்திரத்திற்கு டவுன் பஸ் மற்றும் பேருந்துகள் உள்ளது என்றால் ? சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை 18.11.2023ம் தேதி மதியம் 02.40 மணிக்கு நீதிபதியால் பெறப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். சிகிச்சையில் பிரகாஷ் என்பவர் இருந்த போது தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் ? சரிதான். எந்த வார்டில் இருந்தார் என்றால் ? ஞாபகம் இல்லை. வார்டில் உள்ள மருத்துவரிடம் காயம்பட்ட பிரகாஷ் பேசமுடியாமல் உள்ளார் என்று சான்று ஏதேனும் பெற்றேனா என்றால் ? இல்லை. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் C.T.Scan மற்றும் X Ray எடுப்பதற்கும் தனியாக அறைகள் உள்ளதா என்றால் ? இருக்கலாம். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் ? நான் விசாரிக்கும்போது ராமச்சந்திரன் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். புகார் வாக்குமூலமானது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ? இல்லை. சம்பவ இடம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். சம்பவ இடத்தில் இருந்து ஒட்டன்சத்திரம் வரவேண்டும் என்றால் சத்திரப்பட்டி வந்து தான் வர வேண்டும் என்றால் ? சத்திரப்பட்டி வந்தும் வரலாம், பெரியகோட்டை வந்தும் வரலாம். சத்திரப்பட்டி மெயின் ரோட்டில் காவல் நிலையம் உள்ளது என்றால் ? சரிதான். மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்ட Intimation அச்சடிக்கப்பட்ட படிவம் என்றால் ? இல்லை. போன் வழியாக தகவல் சொன்னார்கள். அரசு மருத்துவமனையில் இருந்து கொடுக்கப்பட்ட தகவலை பதிவு செய்ய தனியாக ஒரு பதிவேடு உள்ளது என்றால் ? ஆமாம். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக முதன்முதலாக காவல் நிலையத்திற்கு கொடுக்கப்பட்ட தகவலானது அரசு மருத்துவமனையில் இருந்து கொடுக்கப்பட்ட தகவல் என்றால் ? சரிதான். மேற்படி Intimation அரசு மருத்துவமனையில் இருந்து

பெற்றதை பொது நாட்குறிப்பேட்டிலும் பதிய வேண்டும் என்றால் ? சரிதான். பொது நாட்குறிப்பேட்டில் பதிவு மேற்கொண்ட பிறகு தான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ? சரிதான். 17.11.2023ம் தேதி இரவு 08.00 மணிக்கு காவல் நிலையத்தில் புகார்தாரர் இருந்தாரா என்றால் ? இல்லை. முதல் தகவல் அறிக்கையின் நகலினை புகார்தாரருக்கு கொடுக்க வேண்டும் என்றால் ? சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது இலவசமாக புகார்தாரருக்கு நகல் கொடுக்கப்பட்ட கையொப்பம் பெறப்பட்டுள்ளதா என்றால் ? பெறப்பட்டுள்ளது. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ராமச்சந்திரன் என்பவருடைய புகார் பெறப்படவில்லை என்றாலும், அதன் பின்னர் பெறப்பட்டு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. அதனால் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு சென்று அடைந்ததற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.02 19:49:17 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.124/2025**
**வழக்கு சாட்சி P.W.12**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.V.குளுந்தம்மாள் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கவிதா | தொழில் | : காவல் ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : பாண்டியன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பழனி | வயது | : சுமார் 48 |
| தாலுக்கா | : பழனி | நாள் | : 02.09.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நான் தற்போது பழனி அடிவாரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த சமயம் 17.11.2023ம் தேதி மேற்படி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.திருமலைச்சாமி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை 159/2023 இ.த.ச பிரிவுகள் 324, 307 ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கையை 17.11.2023ம் தேதி 21.00 மணிக்கு பெற்று இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பின்பு இவ்வழக்கில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்த பிரகாஷ் என்பவரை விசாரணை செய்ய திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு இருந்தார். அவரை விசாரணை செய்ய இயலாத நிலையில் இருந்தால் அவரது தகப்பனார் ராமசந்திரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி சிவராஜ் என்பவரை தேடி வந்த நிலையில் 18.11.2023 ம் தேதி காலை 06.30 மணிக்கு தேவத்துாரில் சி.வேலுார் ரெட்டியபட்டி பிரிவு அருகே வந்த TN 57 P 3484 சுசுக்கி இருசக்கர வாகனத்தில்

வந்த எதிரியை தகவலாளி அடையாளம் காட்ட கைதுக்கான காரணம் கூறி காலை 06.30 மணிக்கு கைது செய்தும், தகவலின் பேரில் மேற்படி இடத்திற்கு வந்த பெரியகோட்டை கிராம நிர்வாக அதிகாரி பட்டத்தையன், உதவியாளர் ஆராயி ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி சிவராஜ் என்பவரை விசாரணை செய்ய அவர் எந்தவித அச்சுறுத்தலுமின்றி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை 18.11.2023ம் தேதி காலை 07.15 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடமும், சாட்சியிடமும் கையொப்பம் பெற்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் என்னை கூட்டிச் சென்றால் நான் பிரகாஷை அடித்த சம்பவ இடத்தையும், அடித்த கட்டையையும், அவரது வண்டியையும் மக்காச்சோள காட்டிற்குள் மறைத்து வைத்துள்ளதையும் அடையாளம் காட்டி எடுத்து ஒப்படைப்பேன். அதேபோல் நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 57 P 3484 என்ற இருசக்கர வாகனத்தை நான் தற்போது தங்களிடம் ஒப்படைக்கிறேன் என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11**. பிறகு எதிரி அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.12. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.13**. பின்பு சம்பவ இடத்தில் இருந்த காயம்பட்ட பிரகாஷின் இருசக்கர வாகனம் TN 57 AZ 9316 என்ற இருசக்கர வாகனத்தையும் சம்பவ இடத்தில் கிடந்த LAVA கருப்பு நிற பட்டன் செல்போன் மற்றும் எதிரி எடுத்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்திய சவுக்கு கட்டை மற்றும் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 57 P 3481 என்ற இருசக்கர வாகனத்தையும் எதிரி சம்பவத்தின் போது அணிந்திருந்த வெள்ளை டிசைன் போட்ட கருப்பு முழுக்கை சட்டை, வெள்ளை கருப்பு கட்டம் போட்ட புளூ கலர் லுங்கி ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வழியாக கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.14**. பின்னர்

எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து அவரை திரேக சோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்தேன். பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் சசிரேகா, பாண்டியம்மாள், காளியம்மாள், ஈஸ்வரன், பாண்டி, ராமராஜ், முருகேசன், பட்டத்தையன், ஆராயி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்தாட்சியில் கைப்பற்றிய வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.15.** பின்பு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.12.2023ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட பிரகாஷ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.07.2024ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட பிரகாஷ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சிவசெல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் காயச்சான்று வழங்கினார். பின்பு இவ்வழக்கில் எனது விசாரணை முடித்து எதிரி சிவராஜ் மீது இ.த.ச பிரிவுகள் 324, 307 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய 16.11.2023ம் தேதி பிரகாஷ் என்பவரும், சிவராஜ் என்பவரும் சத்திரப்பட்டி ஆண்டவர் டீ கடையில் உட்கார்ந்து அரை மணி நேரம் பேசிக் கொண்டு இருந்தோம் என்று என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ? அரை மணி நேரம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால், நாங்கள் சத்திரப்பட்டிக்கு வந்தபோது ஆண்டவர் டீ கடையில் சிவராஜ் நின்று இருந்தார். எனது மனைவி செல்போன் வாங்குவதற்காக மகேஷ் கடைக்கு சென்றுவிட்டார். நானும், சிவராஜ் என்பவரும் பேசிக் கொண்டு இருந்தோம் என்று சொல்லியுள்ளார். எதிரி சரக்கு

சாப்பிடுகிறாயா என்று பிரகாஷிடம் கேட்டதாகவும், அதற்கு பிரகாஷ் கையில் காசு இல்லை என்று கூறினார் என்றும், நான் வாங்கி தருவதாக எதிரி கூறினார் என்றும், என்னிடம் வாக்குமூலம் பிரகாஷ் சொல்லியுள்ளாரா என்றால் ? சொல்லவில்லை. ஆனால், சிவராஜ் தன்னிடம் 300 ரூபாய் கொடுத்து ஒயின் ஷாப்பிற்கு சென்று பிராந்தி வாங்கி வரச் சொல்லி அனுப்பி வைத்ததாக என்னிடம் சொன்னார். சிவராஜ், பிரகாஷ் என்பவரை ரெட்டிபட்டி பிரிவில் இருக்க சொன்னார் என்று எனது விசாரணையில் பிரகாஷ் சொல்லவில்லை என்றால் ? சொல்லவில்லை. பிரகாஷ் என்பவரின் செல்போனை சிவராஜ் வாங்கி வைத்துக் கொண்டதாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரிதான். சிவராஜ் தனது வண்டியை தள்ளி வைத்துவிட்டு பிரகாஷ் என்பவரின் வண்டியை எடுத்து ஓட்டும்படியும், நான் பின்னால் உட்கார்ந்து கொள்வதாகவும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரிதான். ஆனால், கறி சாப்பிட போகலாம் வண்டியை எடு என்று சொல்லியுள்ளார். அன்றைய தினம் மின்சாரம் ஆப் ஆகிவிட்டது என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரிதான். அன்றைய தினம் மழை பெய்து கொண்டு இருந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரிதான். சிவராஜ், பிரகாஷ் என்பவரின் மண்டையில் அடித்து அவர் மயங்கி கீழே விழுந்துவிட்டதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் ? அந்தமாதிரி சொல்லவில்லை. முகத்தில் அடித்துவிட்டதாக தான் சொல்லியுள்ளார். எப்படியாவது தப்பி வேண்டும் என்று மக்காச்சோள காட்டிற்குள் ஓடியதாக பிரகாஷ் என்னிடம் சொல்லவில்லை என்றால் ? சரிதான். காட்டிற்குள் எதிரி சிவராஜ், பிரகாஷ் என்பவரை அடித்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரியல்ல, சொல்லியுள்ளார். மூட்டை தூக்க கூடிய கொக்கியால் தன்னை முகத்தில் தாக்கியதாக பிரகாஷ் எனது விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் ? சரிதான். எப்படியாவது தப்பிக்க சோளக்காட்டிற்குள் ஒளிந்து கொண்டு வேட்டியால் முகத்தை கட்டிக்கொண்டதாக எனது விசாரணையில் சொல்லவில்லை

என்றால் ? சரிதான். அன்றைய இரவு முழுவதும் சோளக்காட்டிற்குள்ளேயே உட்கார்ந்து இருந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. சொல்லியுள்ளார். இரவு நேரமாக இருந்ததால் அந்த பகுதியில் ஆள் நடமாட்டம் இல்லாமல் ரோட்டின் ஓரத்தில் படுத்து இருந்தேன் என்று சொல்லியுள்ளார். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை மேற்கொண்டதற்கு பிறகு தான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் உள்ள விபரம் தெரிய வந்தது என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சொல்லவில்லை. இ.த.ச பிரிவு 307 அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்ககூடிய வழக்கு என்றால் ? சரிதான். இதுபோன்ற வழக்குகளில் ஆவணங்களை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற விபரம் தெரியும் என்றால் ? சரிதான். இதுபோன்ற வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல வேண்டும் என்ற விபரம் தெரியும் என்றால் ? சரிதான். என்னால் செல்லமுடியவில்லை என்றால் எனக்கு கீழாக பணிபுரிய கூடிய அலுவலர்களை சம்பவ இடத்திற்கு விரைந்து அனுப்பி பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றால் ? சரிதான். முதல் தகவல் அறிக்கை நான் பெற்ற தேதி மற்றும் நேரம் என்ன என்றால் ? 17.11.2023ம் தேதி 21.00 மணிக்கு நான் பெற்றேன். சத்திரப்பட்டி ஒரு தனி கிராமம் என்றால் ? சரிதான். கிராம நிர்வாக அதிகாரி வருவாய் அதிகாரி உள்ள கிராமம் என்றால் ? சரிதான். எனக்கு தகவல் கிடைத்தவுடன் அந்த கிராமத்தில் உள்ள வருவாய்துறையினர் உதவியை நாடினேன் என்றால் ? சத்திரப்பட்டி வருவாய்துறையினர் உதவியை நான் நாடவில்லை. எங்களது காவல் நிலைய ஆள்கைக்கு உட்பட்ட கிராம நிர்வாக அதிகாரிகளின் கைப்பேசி எண்கள் எங்களது காவல் நிலையத்தில் உள்ளது என்றால் ? சரிதான். வெள்ளை டிசைன் போட்ட கருப்பு நிற முழுக்கை சட்டை சா.பொ.4, வெள்ளை கருப்பு கட்டம் போட்ட புளூ கலர் லுங்கி சா.பொ.5 ஆகிய இரண்டு சான்று பொருட்களும் அ.சா.2 பிரகாஷ் என்பவருடையது என்றால் ? சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன கட்டை என்றும், அதன்

நீளம் ஆகியவைகள் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ? சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ளேன். மாதிரி வரைபடத்தில் துரைச்சாமி என்பவரின் தோட்டம் காண்பிக்கப்படவில்லை என்றால் ? சரிதான். ரெட்டிபட்டி, பெரியகோட்டை பிரிவு மாதிரி வரைபடத்தில் காட்டப்படவில்லை என்றால் ? சரிதான். படிவம் 91 ஆவணங்களை பார்த்து தான் தயார் செய்தேன் என்றால் ? சரிதான். படிவம் 91ல் சத்திரப்பட்டி டு தேவத்தூர் ரோடு பெரியகோட்டை பிரிவு துரைச்சாமி தோட்டத்திற்கு அருகில் வைத்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். பார்வை மகஜரில் சம்பவ இடமானது சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து சுமார் 5 கி.மீ துாரம் வடக்கே சத்திரப்பட்டி டு தேவத்துார் செல்லும் தார் ரோட்டில் பெரியகோட்டை பிரிவு அருகே சுப்புராஜ் என்பவரின் மக்காச்சோளக்காட்டிற்கு அருகே அமைந்துள்ளது என்று சம்பவ இடத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் ? சரிதான். பார்வை மகஜரில் எதிரி பிரகாஷ் என்பவரை அடிக்க பயன்படுத்திய மரக்கட்டை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். இந்த வழக்கை பிரகாஷ் என்பவருக்கு சிகிச்சை அளித்த ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை மற்றும் திண்டுக்கல் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டை பார்த்தேனா என்றால் ? பார்த்தேன். பிரகாஷ் என்பவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காலத்தில் பார்த்தேனா என்றால் ? பார்த்தேன். வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டவுடன் சென்று பார்த்தேன். அதற்கு பிறகு 16.12.2023ம் தேதி சென்று பார்த்தேன். அதற்கு பிறகு தான் டிஸ்சார்ஜ் ஆகி வந்த பிறகு 20.12.2023ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்தேன். திண்டுக்கலில் பிரகாஷ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை பார்த்து விசாரித்தேனா என்றால் ? பார்த்து விசாரித்தேன். அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேனா என்றால்? இல்லை. இந்த வழக்கில் மருத்துவரின் சாட்சியம் முக்கியமான சாட்சியம் என்று எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். மருத்துவரால் பராமரிக்கப்படும்

ஆவணங்கள் முக்கியம் என்பது எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். சிகிச்சை அளித்த Case Sheet ஏதாவதை கைப்பற்றினேனா என்றால் ? Case Sheet வாங்கவில்லை. பிரகாஷ் என்பவருக்கு எடுக்கப்பட்ட C.T. Scan கைப்பற்றினேனா என்றால் ? இல்லை. இந்த வழக்கில் மூட்டை தூக்கக்கூடிய கொக்கி ஏதேனும் கைப்பற்றினேனா என்றால் ? இல்லை. இந்த வழக்கில் மூட்டை தூக்கக்கூடிய கொக்கி பயன்படுத்தப்படவில்லை என்பதை நான் எனது புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ? மூட்டை தூக்ககூடிய கொக்கி பயன்படுத்தியதாக எனது விசாரணையில் சொல்லவில்லை. இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறான தகவலை தாங்கிய இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. பிரகாஷ் என்பவருடைய துணிகளில் இரத்தம் பட்டு இருந்ததை நான் ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் ? ஆமாம். பிரகாஷ் என்பவர் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் இருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்து ICU வார்டு என்பதால் மருத்துவமனை நிர்வாகம் கொடுத்திருந்த துணிகளை அணிந்திருந்தார். அதனால் கைப்பற்ற இயலவில்லை. மருத்துவமனை நிர்வாகத்திடம் அவர் அணிந்திருந்த துணிகளை பற்றி விசாரணை மேற்கொண்டேனா என்றால் ? இல்லை. சா.பொ.4 மற்றும் சா.பொ.5 யாருடைய துணிகள் என்று படிவம் 91ல் எழுதப்படவில்லை என்றால் ? சரிதான். அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன முறையில் தயார் செய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்கேற்ப பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் ? சரியல்ல. தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் சாட்சிகளின் கையொப்பம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் ? சரியல்ல. சான்று பொருட்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் ? சரியல்ல. பிரகாஷ் என்பவரின் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர்

அறிக்கைக்கு உட்படுத்தவில்லை என்றால் ? சரியல்ல. அவ்வாறு மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பினால் மோட்டார் வாகன விபத்து என்று தெரிந்துவிடும் என்பதால் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பவில்லை என்றால் ? சரியல்ல. பிரகாஷ் என்பவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.09.02 19:49:30 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்